

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை சைவ வேளாண் பிரபு
தினநாயக முதலியார் வழித்தோன்றலும் சைவ
வேளாண் பிரபு இராச வல்லப முதலியார்
வழித்தோன்றலிலும் மலர்ந்த சிறப்புறு திலகர்

# உயர்திரு. அப்பர் தியாகராஜர் அவர்களின்

ஞாபகார்த்த

# "தியாகச்சுடர்"

**13.01.2006**



# சமர்ப்பணம்



வட்டுக்கோட்டையில் இருபெரும்
மரபு வழித்தோன்றிய எந்தையே!
எங்கள் குடும்ப குலதிலகரே!
எம் வாழ்விற்கு நல்வழி காட்டி
நன்னெறிப்படுத்தி
நாளும் நயப்புரை புகன்று
இனியன பேசி
இன்செயல் நல்கி
நானிலம் போற்ற
எம்மை வளப்படுத்திய நாயகனே!
தங்களின் பாதகமலங்கட்கு
இந்த நினைவுச் சுடராம்
நினைவு மலரைக்
கண்ணீர் மல்கிக்
கசிந்துருகி
வணங்கிச்
சமர்ப்பணம்
செய்கின்றோம்.







மனைவி,
மக்கள்,
மருமக்கள்,
பேரர்



உ



தோற்றம் : 24.12.1934 மறைவு: 14.12.2005


அமரர் உயர்திரு

# அப்பர் தியாகராஜர் அவர்கள்

## திதிவெண்பா

பார்த்திப நல்லாண்டு பார்புகழும் மார்கழியில்
சீர்பெருகு பூரணைத் திதியதனில் - பேர்பெற்ற
தியாக ராஜரெனும் சீருடைச் செம்மல்
தியாகரடி சேர்ந்தாரெனச் செப்பு

அமரரின் இளமைத் தோற்றம்



உ

சிவமயம்

# தோத்திரத்திரட்டு



விநாயகர் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெல்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் - தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

## பஞ்ச புராணம்

### தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசியென்
உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் உனை நான் பணிந்து
ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய
பெம்மான் இவன் அன்றே

## திருவாசகம்

அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடைமை யெல்லாமுங்
குன்றே அனையாய் யெனையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறெனக் குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காகத்
வெளிவளர் தெய்வக் கூத்து கந்தாயைக்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில
வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகமெலாம்.

## திருப்புகழ்

துள்ளுமத வேட்கைக் கணையாலே
தொல்லை நெடுநீலக் கடலாலே
மெள்ள வரு சோலைக் குயிலாலே
மெய்யுரு மானைத் தழுவாயே
தெள்ளு தமிழ் பாடத்தெளிவோனே
செய்ய குமரேசத் திறலோனே
வள்ளல் தொழுஞானக் கழலோனே
வள்ளி மணவாளப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம்வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



## வளம்பலபெற்று நலன்பெற வாழ்ந்த
## வட்டுக்கோட்டை
## உயர்திரு. அப்பர் தியாகராஜர் அவர்கள்

ஈழமணித்திருநாட்டில் இலங்கிடும் வடபால் பாணர் போற்றிய யாழ்க்குடா தன்னில் வட்டுக்கோட்டையம் பதியில் சைவவேளாண்குலத்தில் தினநாயகமுதலியார் பரம்பரையில் தோன்றியவர் திரு. சுப்பிரமணியம் (மார்க்கண்டர்) அவர்கள். சுப்பிரமணியம் தம்பதிகளின் அருந்தவப்புதல்வனே அப்பர். இல்லற வாழ்வில் இனிதே வாழ திரு.அப்பர் அவர்கள்தம் உறவினரில் சீருஞ்சிறப்புமாக வாழ்ந்த நாகம்மாவைக் கல்யாணம் செய்தார். கல்யாண வாழ்வு கரும்பாய்ச் சுவைக்க இந்நிலம் மகிழத் திரு. தியாகராஜர் அவர்களைப் பெற்றெடுத்துப் பெருவாழ்வு வாழ்ந்தனர்.

அப்பர் தம்பதிகட்கு மூத்த பிள்ளையாகத் திரு.அம்பலவாணரும் இரண்டாவது பிள்ளையாக திரு.குமாரசுவாமியும் மூன்றாவது பிள்ளையாகத் திரு.சுப்பிரமணியம் அவர்களும் கடைக்குட்டி மகனாக இவ்வரலாற்றின் நாயகன் திரு.தியாகராஜரும் பிறந்தனர். 1934ம் ஆண்டு மார்கழி மாதம் 24ம் திகதி (24.12.1934) இம்மண்ணில் மேதகு மைந்தனாகத் தோன்றிய தியாகராஜர் யாவர்க்கும் கண்கவர் குழந்தையாகவும் செல்லப்பிள்ளையாகவும் விளங்கினார். குடும்பத்தில் கடைக்குட்டியானதால் பெற்றோர்க்கும் சகோதரர்களுக்கும் என்றும் இனியவராகவே திகழ்ந்தார்.

பெற்றோர் தியாகராஜரைப் பொன்போல பேணி வளர்த்தெடுத்துக் கல்வி புகட்டி வைத்தனர்.இவரது ஆரம்பக் கல்வி தற்பொழுது வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி என அழைக்கப் பெறும் வட்டு திருஞானசம்பந்த மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. இடைநிலைக் கல்வியையும் உயர்கல்வியையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் மேற்கொண்டார். ஆறாம் வகுப்புத் தொடக்கம் உயர் சிரேஷ்ட தராதரம் (H.S.C)

வகுப்புவரை கற்றுச்சிறந்த மாணவனாகத் திகழ்ந்ததோடு பரீட்சைகளிலும் சிறப்புறச் சித்திகள் பெற்றுப் பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் பெரும்புகழ் பெற்றுக் கொடுத்தார். இங்கு படிக்குங்காலத்தில் விளையாட்டுத் துறைகள் பலவற்றில் ஈடுபாடு கொண்டு பரிசில்கள் பலபெற்றார்.

பின் கொழும்பு மாநகர் சென்று தன் தொழில்நுட்பக் கல்வியை மருதானை தொழில் நுட்பக் கல்லூரியில் பயின்றார். முதலில் படவரைக் கலைஞராகப் பயின்று (DRAGHMSMENT)பின் அளவையாளர், கணிய அளவையாளர் (QUANTITY SURVEYOR) கல்வியையும் மேற் கொண்டு தொழில்நுட்பத்தில் இருதகுதிகளைப் பெற்றார். தொழில்நுட்பக் கல்வியைப் பெற்றபின் உத்தியோகம் புருடலட்சணம் என்பதற்கிணங்க அரசாங்க சேவையை மேற்கொண்டார். அரசாங்க நீர்ப்பாசன இலாகாவில் தொழில்நுட்பவியலாளராக இலங்கையில் பற்பல இடங்களில் சேவையாற்றினார்.

1. 1956 – 1960 பண்டாரவளை நீர்ப்பாசன இலாகா
2. 1961 – 1965 மட்டக்களப்பு நீர்ப்பாசன இலாகா
3. 1966 – 1969 கிளிநொச்சி நீர்ப்பாசன இலாகா
4. 1970 – 1977 அனுராதபுரம் நீர்ப்பாசன இலாகா
5. 1978 – 1980 யாழ்ப்பாணம் நீர்ப்பாசன இலாகா
6. 1981 – 1982 வவுனியா நீர்ப்பாசன இலாகா

இவ்வாறு இலங்கையின் பற்பல இடங்களில் சேவையாற்றிய பின் 1983 தொடக்கம் வெளிநாடாகிய ஓமான் நாட்டிற்குச் சென்று 13 வருடங்கள் சேவையாற்றி பணமும் பொருளும் சேர்த்துப் பின்பு ஊரோடு வந்து அழகான வீடுகட்டி மனைவி பிள்ளைகளோடு சிறப்பாக வாழ்ந்து வந்தார்.

மேற்படி சேவையாற்றும் காலத்திலே 10.05.1963 ஆம் ஆண்டு இவரது கல்யாணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. வட்டுக்கோட்டை இராகவல்லவமுதலியார் வழித்தோன்றலில் உதித்த சிவகுருநாதர் தாமோதரம்பிள்ளை பெருமையினார் (இராசா) அவர்கட்கும் தினநாயக முதலியார் வழித்தோன்றல் வேலுப்பிள்ளை முத்தம்மா ஆகிய தம்பதிகளின் அன்பு மகள் திலகவதி (மகம்) அவர்களைத் திருமணம் செய்தார். திருமணம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இல்லற வாழ்வில் இணைந்த தம்பதிகளான தியாகராஜர் திலகவதி, தியாகப்பெருமான் நல்லருளால் இனிய சற்புத்திரர்களைப் பெற்றெடுத்தனர்.

முதற்கண்ட முத்தாக மூத்த புதல்வனாக சிவகுமாரையும் இம்மானிலத்தில் இன்புற்று வாழ இரண்டாவது புதல்வனாக ஸ்கந்தகுமாரையும் கடைக்குட்டியும் செல்லப்பிள்ளையாகவும் குறிஞ்சி மலர்போன்று பூத்த ஞானசக்தியையும் முறையே 1966ஆம் ஆண்டு 1969ஆம் ஆண்டு 1970ஆம் ஆண்டு பெற்று மகிழ்ந்து பெருவாழ்வு வாழ்ந்தனர்.

தம்மினிய பிள்ளைகளுக்கு கல்வி புகட்டி நன்னெறி காட்டி நல்வழிப்படுத்தி உற்றாரும் உறவினரும் ஊரும் உலகினரும் போற்றும் படியாக வளர்த்தெடுத்தனர். புகழும் பெற்றனர்.இதனால் பெருமிதமும் உற்றனர். மூத்த மகன் சிவகுமார் அவர்கட்கு சண்டிலிப்பாய் திரு குகதாசன் தம்பதிகளின் அன்பு மகளாகிய B.Com பட்டதாரி சுபாசினியைத் திருமணம் செய்து வைத்தனர். மூத்தமகன் சிவகுமார் தம்பதிகள் நிசாங்கன்,நிதிஷன், நிரஜா ஆகிய புத்திரச் செல்வங்களோடு குடும்பமாகப் பார்போற்றும் பிரான்ஸ் நாட்டில் வாழ்கின்றனர். திரு.சிவகுமார் அவர்கள் தனது சொந்தக் ஹோட்டலில் மனேச்சராகவும் நிர்வகிக்கும் பொறுப்பாளராகவும் சேவையாற்றுகின்றார். தம்மூத்த புதல்வனின் குடும்ப வாழ்க்கையிலும் சீரும் சிறப்புகளிலும் சிறப்பாகப்

பேரர்களைக் கண்டு இன்புறும் பாக்கியத்திலும் தியாகராஜர் திலகவதி தம்பதிகள் ஆனந்த வெள்ளத்தில் மிதந்தனர்.

கல்வி கேள்விகளில் வல்லவரான இரண்டாவது மகன் திரு.ஸ்கந்தகுமார் கணக்காளராக (ACCOUNTAN) சீமையெனச் சிறப்பாகப் போற்றப்படும் இலண்டன் மாநகரில் சேவையாற்றுகின்றார். இவருக்கு தெல்லிப்பளை திரு.ஸ்கந்தானந்தா தம்பதிகளின் அருந்தவப் புதல்வி கணக்காளர்(ACCOUNTAN) அருணா அவர்கட்குக் கல்யாணம் செய்வித்து மட்டற்ற மகிழ்ச்சி கொண்டனர். ஸ்கந்தகுமார் அருணா தம்பதிகள் அன்றிலும் பெடையும்போல இணைபிரியாது இலண்டன் மாநகரில் வாழ்வதோடு நல்நிலையில் சேவையாற்றிச் சிறப்போடு வாழ்கின்றனர்.

செல்லப்பிள்ளை கடைக்குட்டியுமான ஞானசக்திக்கு தம் சொந்த ஊரான வட்டுக்கோட்டையில் திரு பொன்னம்பலம் நவரத்தினம் தம்பதிகளின் திருவளர் செல்வன் தொழில்நுட்பவியலாளர் திரு.கெங்காதரனைத் திருமணம் செய்வித்து இறும்பூதெய்தினர். திரு கெங்காதரன் ஞானசக்தி தம்பதிகள் இன்று பேர்பெற்ற பிரான்ஸ் நாட்டில் சிறப்போடு வாழ்கின்றனர்.

இவ்வாறு பிள்ளைகள், மருமக்கள், பேரர்களோடு இன்புற்று வாழ்ந்து உற்றார் உறவினரோடு அன்பும் பாசமும் வைத்து வட்டுக்கோட்டையில் ஓர் சிறந்த புருஷனாகத் திகழ்ந்து வாழ்ந்த திரு.தியாகராஜர் அவர்கட்கு ஆண்டவன் அருளால் அழைப்பு வந்தது. 14.12.2005 அன்று பூரணை நன்நாளில் அந்தகன் அவனியில் காலடி வைத்தான். வட்டுக்கோட்டை "திலகவாசா" இல்லத்தில் தியாகராஜரைக் கண்ணுற்றான். அவரது இன்னுயிரை எடுத்து இறையடி சேர்த்தான். இதனால் கட்டிய மனைவி கதி கலங்கிக் கண்ணீர்விட்டுக் கதறியழுது துன்பக்கடலில் மூழ்கப் பெற்ற பிள்ளைகள் செய்தியறிந்து வெளிநாடுகளிலிருந்து

புலம்பியழ மருமகன் மனம் நெகிழ்ந்து உருகியழ பேரர்கள் பேதலித்தழ உற்றார், உறவினர் உருகியழ, அன்பர்கள் நண்பர் ஆற்றாது ஓ வென்று அரற்றியழ அன்பர் தியாகராஜர் ஆண்டவன் திருவடியைச் சேர்ந்தார்.

அமரர் திரு தியாகராஜர் ஆண்டவன் மீது அளவிலா பக்தன். வட்டுக்கோட்டை மீனாட்சியம்மன் கோவில் புனரமைப்புகளில் முன்னின்று பணியாற்றி கும்பாபிஷேகம் செவ்வனே நடைபெற உதவிய வள்ளல். சங்கரத்தையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் பத்திரகாளியம்மன் கோபுர நிர்மாணத்திற்கும் பெரிதும் உதவியவர். தனது பிள்ளைகளின் பணஉதவியோடு கோயிற் திருப்பணிகள் பெரும்பல செய்தவர். அபிஷேக பூஜைகளை முன்னின்று நடத்தியவர். இவ்வாறு பற்பல திருப்பணிகள் செய்து தன் ஆத்ம பலத்தை வளர்த்த அன்புத் தொண்டன்.

அமரர் திரு.தியாகராஜர் சமயப்பணியோடு சமூகப் பணிகளிலும் நாட்டமுடையவர். சிரமதானப் பணிகள், சுபஅபரக்கிரியைகளோடு கூடிய வைபவங்களில் சிறப்பான கொண்டாட்டங்கள் கலாச்சார விழாக்கள் யாவற்றிலும் பங்குபற்றி சிறப்பிப்பதோடு தானும் அகமிக மகிழ்வார். உற்றார், உறவினர்க்கு ஈவதிலும் வசதியற்றோரின் வளம்பல வாழ்விற்கும் வழியமைத்தவர். அன்பர்,நண்பர்கள் உறவில் அலாதிப்பிரியமுடையவர்.

தன்பிள்ளைகளை நல்நிலைக்கு உயர்த்தி அவர்கள் மூலமாக "இவன் தந்தை என் தோற்றான் கொல் எனும் சொல்" என்பதற்கிணங்க உயர்ந்த தந்தையாகத் திகழ்ந்தவர். இத்தகைய உயரிய எண்ணங்கள், உயரிய செயல்கள் கொண்ட அன்பர் திரு.தியாகராஜர் இன்றில்லையேயெனும் போது நெஞ்சு நெகிழ்கிறது! கண்ணீர் வருகிறது! கவலை பெருகுகிறது! இன்றிருந்தார் நாளையில்லையே! எனும் தத்துவத்தை நினைக்க வைக்கிறது. என்செய்வது! யாவும் இறைசெயலென நினைத்து அமைதிபெறுவோம்! ஆறுதலடைவோம்! அன்பர் திரு.தியாகராஜர் அவர்களின் ஆத்மா சாந்திபெற அனைவரும் ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உ

சிவமயம்

# கவலையால் எழுந்த கண்ணீர்த் திவலைகள்

## மனைவி

பூவிழந்தேன் பொட்டிழந்தேன் பொற்றாலி யானிழந்தேன்
பொங்கிவரும் கண்ணீரால் பொழுதையிங்குபோக்குகின்றேன்
நாவிழந்த ஊமையைப்போல் நானிலத்தே யழுகின்றேன்
நல்லவரே! என்நாதா! நலிந்திங்கு வாடுகின்றேன்
காவிலுள்ள கவின்மலர்கள் கருகியே விழுவதுபோல்
கவலையால் யான்கருகிக் கதிகலங்கி நிற்கின்றேன்
கூவியுமை யழைப்பதற்கென் குரல்தானுங் கேட்காது
கூற்றுவனும் உமையழைக்கக் கைலைதான் அடைந்தீரோ!

கடல்கடந்த எம்புதல்வர் கதறியே அங்குஅழ
காரிகையாள் யானிங்கு கலங்கியே இங்குஅழ
மடலெழுதி எமக்குநீர் மனமாற வைப்பீரோ
மன்னவனே! உமைநினைந்து மதிமயங்கி யழுகின்றேன்
தடபுடலாய் வாழ்க்கையில்யாம் தரணிதனில் பவனிவந்தோம்
தக்கோனே! நீரின்றித் தவித்திங்கே யழுகின்றேன்
உடல்வாடி உளமுருகி உருக்குலைந்தே யழுகின்றேன்
உத்தமரே! என்கணவா! உமையெங்கே காண்பதெப்போ?

அன்புமுகங் காட்டியெமை ஆதரித்து வந்தவரே
அந்தகன் அழைத்தவுடன் அரனடிக்கோ சென்றீரோ
இன்புதரும் வார்த்தைகளை என்றென்றும் உரைத்தவரே
இந்நிலத்தில் நீரின்றி ஏங்கியிங்கே தவிக்கின்றேன்.
தென்புபல கூறுகின்ற தேனான என்தலைவா !
தேடியே காணாமல் தேம்பியிங்கே அழுகின்றேன்
வன்புமொழி பேசாத வள்ளலே! எங்குற்றீர்!
விண்ணுலகோ! வியனுலகோ! பிரிந்துநீர் சென்றீரோ!

## பிள்ளைகள்

## ஆண்பிள்ளைகள் (வெளிநாடு – பிரான்ஸ் - லண்டன்)

கல்விபல புகட்டியெமைக் காதலித்தே வளர்த்துவந்தீர்
களிப்புயாம் பெற்றிடவே கனிவுமொழி கூறிவைப்பீர்!
அல்லும் பகலுமெமை அன்புடனே யுபசரித்து
அறிவுமொழி கூறிவைத்த அப்பாவே! எங்குற்றீர்!
சொல்லும் செயலெல்லாம் சால்புடனே யாம் செய்ய
சொர்க்கமாம் வெளிநாடு செல்லவைத்து மகிழ்வித்தீர்!
கல்லுங் கரைவதுபோல் கவலையால் உருகுகின்றோம்
கவலையாம் போக்குதற்கு கைலைநீங்கி வருவீரோ!

அப்பாவே! அப்பாவே! ஆசையுள்ள அப்பாவே!
அகிலமதில் யாம்காண ஆவலொடு வாரதெப்போ!
இப்பாரில் எம்மப்பா இல்லாமல் யாமெல்லாம்
இடிவிழுந்த மரம்போல இந்நிலத்தே இருக்கின்றோம்
தப்பேதும் யாம்செய்தால் தடவி எமை யணைத்தநீர்
தக்கமொழி புகன்றதையாம் தரணிதனில் மறப்போமா!
எப்போதும் நினைக்கின்றொம் எங்குற்றீர்! எங்குற்றீர்!
எம்முயிரே! அப்பாவே! எழுந்தோடி வருவீரோ!

## பெண்பிள்ளை (வெளிநாடு – பிரான்ஸ்)

ஒண்ணே ஒண்ணென்று ஒக்களையில் தூக்கிவைத்து
ஓயாமற் கொஞ்சிவிளை யாடுகின்ற என்னப்பா!
கண்ணே கண்ணென்ற களிப்போடு அரவணைத்துக்
கன்னல்மொழி பேசுகின்ற கருணையுள்ள அப்பாவே!
உண்ணாய் உண்ணாயென்று ஊட்டிவைக்கும் என்னப்பா!
உருகியான் இங்குஅழ உற்றவிடம் எவ்விடமோ?
வண்ணக் குரலாலே வாகுறிஞ்சி மலரென்பீர்
வானுலகு சென்றீரோ! வகையறியேன் கூறுமப்பா!

நாலாயிரம் மைல்தாண்டி நானிங்கு இருந்துவிட்டேன்
நாளுமென்தன் அப்பாவின் நலன்தன்னைப் பார்க்கவில்லை
பால்பாயும் நாடான பரிஸ்தன்னில் வாழ்ந்ததனால்
பால்பருக்கும் நேரத்தில் பக்கத்தே யிருக்கவில்லை
காலனவன் அழைக்கையிலே கைபிடித்தோ பார்க்கவில்லை
கவலையால் வாடியேயான் கதறியிங்கே அழுகின்றேன்.
வேல்தாங்கும் வேலவனே! வேதனையால் துடிக்கின்றேன்
வேணவா அப்பாவை மேதினியில் காண்பதெப்போ!

## மருமக்கள்

அன்பான மாமாவை அகிலமதிற் காணாது
அயர்ந்தே வாடுகின்றோம் ஆற்றாது அழுகின்றோம்
தென்பான மொழிபேசும் தேன்போன்ற மாமாவைத்
தேடிடினும் வரமாட்டார் தெய்வமே! நீயறிவாய்!
பொன்போன்ற வாழ்விற்குப் புத்திபல சொல்லிவைத்த
பொன்னுருவாம் மாமாவைப் பூவுலகிற் பார்ப்போமா
இன்புடனே யாம்வாழ இனியதம் பிள்ளைகளை
எமக்களித்த மாமாவே! எப்போதுமைக் காண்போம்!

## பேரர்

அன்புள்ள தாத்தாவே அரியபண்டம் தந்தெமக்கு
அருகிருந்து பார்ப்பீரெ! அவனிவிட்டுப் போனதென்ன
இன்புதரும் கதைகளையாம் யாரிடத்தில் இனிக்கேட்போம்
இனியவரே! இங்கில்லை ஏங்குகின்றோம்! ஏங்குகின்றோம்!'
என்பெலாம் உருகிறதே! எம்தாத்தா இல்லாமல்
ஏங்கியே யழுகின்றோம் எப்போதான் காண்போம்யாம்!
தன்பேரர் இங்குஅழ தரணிவிட்டு ஏன்சென்றீர்?
தாத்தாவே! தாத்தாவே! சடுதியாய் வாரீரோ!

## உற்றார் உறவினர்

உற்றார்க்கு உகந்தவரே! ஊரோடு வாழ்ந்தவரே!
உலகறிய உயர்ந்தவரே! உலகைவிட்டுப் போனதென்ன!
வற்றாத செல்வமொடு வாழ்ந்ததாம் பெருந்தகையே
வளமான வாழ்விற்கு வழிசமைத்த பெரியோனே
குற்றாலத் தருவிபோல் குளிர்ந்தவுரை சொல்கின்ற
குலதிலகா! குணக்குன்றே! குவலயந்தான் பிரிந்தீரோ!
ஆற்றாது அழுகின்றோம் அன்பின் இருப்பிடமே
ஆதரிக்க எவருண்டு அறியாமல் வாடுகின்றோம்

## அன்பர்கள் நண்பர்கள்

நேசமுள்ள மனத்தோனே நீள்கால நட்புடையோய்
நித்தமுமைக் காணாது நீண்மூச்சு விடுகின்றோம்
பாசமுள்ள பண்பாள! பார்புகழும் சீராள!
பாரா துழ்முகத்தைப் பரிதவித்தே நிற்கின்றொம்
தேசுமுகங் கொண்டவரே! தேடரிய எம்தோழ!
தேசமதிற் காணாது திகைத்தே யழுகின்றோம்
கூசுமலர் பாதனது கழலடியோ செல்கையிலே
கூடும்வும் நண்பர்களைக் கூவிநீர் அழைத்தீரோ!

## தேற்றம்

தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தாற் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது



# திருப்பொற்சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்பின்
சக்தியுங் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியுங் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொ சுண்ணம் இடித்துநாமே

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதி பரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தர் கோன் அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொளுநற்கு
ஏய்ந்த பொற் சுண்ணம் இடித்துநாமே

காசணிமின்கள் உலக்கையெல்லாம்
காம்பணிமின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்திச்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற் சுண்ணம் இடித்துநாமே

அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமங் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடர்பொற் சுண்ணம் இடித்துநாமே

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்று
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக் மருமகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடகமெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்கோவுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சேர்த்தெம்பி ரான் என்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆட
சித்தஞ்சிவனொடும் ஆடஆடச்
செங்கயற்கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆடப்
அத்தன் கருணையொ டாட டாட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

மாடு நகைவாழ் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங்களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்
காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கத் கூத்தன்றன்னை
ஐயனைஐய ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்கொடித்தோட்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் மையன் தாள்கள் பாடித்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சண்ண மிடித்துநாமே

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராவிரைக்கும்
கற்றைச் சடைமுடி யான் கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டும் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம்பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்து
மூனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே

அயன்தலை கொண்டு செண் டாடல்பாடி
அருக்கண் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்துநாமே.

வட்ட மலர்க்கொண்றை மாலைபாடி
மத்தமும்பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாகணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடு மரவம்பாடி
ஈசற்கு சுண்ண மிடித்துநாமே

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்மையும் பொய்மையு மாயினார்க்குச்
சோதியு மாய்இரு ளாயிர்க்கு
துன்பமு மாய்இன்ப மாயினார்க்குப்
பாதியு மாய்முற்று மாயினார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினார்க்குப்
காதியும் அந்தமு மாயினாருக்
காடப்பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.



# தோன்றிற் புகழொடு தோன்றுக

பாவாலும் நாவாலும் புகழ்ந்து பேசப்படுவதும் அறிஞராலும் சிறப்பித்துப் போற்றப்பெறுவதும் வட்டுர் என அழைக்கப்பெறும் வட்டுக்கோட்டை ஆகும். .இவ்வூரில் மதிப்புறு குடும்பத்தில் தோன்றியவரே அப்பர் தியாகராஜர் அவர்கள். எடுப்பான தோற்றமும் மிடுக்கான பார்வையும் கனிவான பேச்சும் காண்போர் உள்ளத்தில் என்றும் மறக்கமுடியாத கனவானே தியாகராஜர் அவர்கள்.

நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகம் என்பர் கற்றோர். இவ்வாக்கிற்கமைய அமைந்தவரே அப்பர் தியாகராஜர். சமயசேவை, சமூகசேவை செய்த தீரர், வீரர். ஆலயங்களில் அருந்தொண்டாற்றிய அன்பர் எனது சங்கீத கதாப் பிரசங்கங்களை முன்னின்று கேட்டு ரசிப்பவர். தங்களுடைய பேச்சு இனி எப்போ எங்கே நடைபெறும் என்று உசாவுபவர். நல்ல மனப்பாங்கும் நல்ல மனித நேயமும் கொண்டவர் ஆலய தொண்டுகளில் அலாதிப் பிரியம் கொண்டவர். இத்தகைய அன்புள்ளங் கொண்ட அருஞ்சேவையாளன் இன்றில்லையே எனும் போது யாவர்க்கும் கவலையே என் செய்வது என்குருநாதர் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் கூறிய வாசகத்தை இங்கு நினைவூட்டுகின்றேன்.

"அவனே படைத்தான்
அவனே அழைத்தான்"

ஆகவே ஆண்டவனே படைக்கின்றான் அந்த ஆண்டவனே நம்மை அழைக்கின்றான் என ஆறுதல் கொள்வோம்! அமைதியுறுவோம்! அன்பர் அப்பர் தியாகராஜரின் ஆத்மா சாந்தி பெற என்குல தெய்வமாகிய சுழிபுரம் பறாளாய் முருகனின் திருவடிகளை சிந்திக்கின்றேன்.வந்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வாரியார் குடிமனை
தொல்புரம் கிழக்கு
சுழிபுரம்

கலாபூஷணம், பிரசங்கபூஷணம்,
சிவகலாபூஷணம், சிவநெறிக்கலாநிதி
சுழிபுரம் நடேசன் சிவசண்முகமூர்த்தி
(B.A.DIP IN ED)
(முன்னாள் ஆசிரிய ஆலோசகர்)

# அன்பனாய், நண்பனாய், மைத்துனனாய், சகலனாய் விளங்கிய திரு அப்பர் தியாகராஜர்

வட்டுக்கோட்டை விளானை வளவில் என் நண்பன் அப்பர் தியாகராஜர் பிறந்தார். யானும் இங்கேயே பிறந்தேன். தியாகராஜரும் நானும் ஓராண்டில் பிறந்து வளர்ந்து ஒன்றாகக் கற்று நண்பராய் மைத்துனராய் சகலனாய் இணைந்து ஈருடல் ஓருயிர்போல வளர்ந்தோம். நண்பன் தியாகராஜர் பிறப்புத் தொட்டு இறப்புவரை என் அன்புக்கும் தொடர்புக்கும் உரித்தானவர். தன்னுயிர் போன்று என்னையும் நேசிப்பவர். எங்களது நட்பும் உறவும் மேலும் வளர என் மனைவியின் சகோதரியாகிய திலகவதி (மகம்) அவர்கட்கு பெருமையினாரின் (இராசா) வேண்டு-கோட்கிணங்க அப்பர் நாகம்மா அவர்களின் உதவியோடு டாக்டர் கிருஸ்ணரும் நானும் நண்பன் தியாகராஜர் அவர்கட்கு திருமணம் செய்து வைத்தோம். திருமணமும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதனால் என் குடும்பமும் தியாகராஜர் குடும்பமும் உறவால், அன்பால் இணைந்து விளங்கின.

இன்றோ என் நண்பன் என்னை விட்டுப் பிரிந்ததினால் சோலை இழந்த தனிமரமாக வாழ்கின்றேன். நண்பனை நினைக்கின்ற பொழுதெல்லாம் கண்ணீர் வருகிறது. கவலை மனதை வாட்டுகின்றது. யாவும் விதியின் விளையாட்டே! நண்பனின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" (திருக்குறள்)

இக்குறள்வாக்கிற்கமைய என் நண்பனும் தெய்வத்துள் வைக்கப்படுவான். இஃது எனது முழுநம்பிகை.

விளானை வளவு
வட்டுக்கோட்டை.

நண்பன்
மு.சண்முகநாதன் (தவம்)
முன்னாள் உடையார்
மத்தியஸ்தர், சமூக சேவையாளர்.

## அன்பான மாமாவிற்கு!

சீர்மேவு மெங்கள் குலப்பெருமை பேச
செகத்தினில் உதித்த உத்தமரே!
பூ மாதின் ஒரு நல்ல தலைவன் நீங்கள்
நல்லவரே மீண்டுமினிக் காண்பதெப்போ?
அன்பிற்கோர்இருப்பிடமாய் பாசத்திற்கோர் உறைவிடமாய்
அறிவிற்கோர் களஞ்சியமாய்
அருகினிலே நீரிருக்க அருந்துணை யென்றிருந்தோம்
பூமிதனை விட்டோ எம் மாமா ஏன்போனீரோ!
நிழல் மரமாக நின்று நீங்கள் எமக்கு உதவி செய்தீர்கள்
நிழலதாய் துயர் தொடர நீங்களும் ஏனோ
- விட்டகன்றீர்கள்
கால தேவனே கருணை என்பது உமக்கில்லையே
நாம் படும் வேதனை உமக்கு புரியவில்லையே!
கண்ணீர் மல்கி கதி கலங்கி நிற்கின்றோம்.

எங்கள் மாமா இறைபாதம் எய்திச் சாந்தி பெற்றிட நாமும் சங்கரத்தை வீரபத்திர சமேத பத்திரகாளி அம்பாள் பாதம் பணிவோம்.

சுபம்!

இப்படிக்கு

மைத்துனர் அம்பலவாணர் குடும்பம்
(கதிர், செல்வா, பிறேமா, கேமா)

# மூத்தமகன் சிவகுமாரின் மன நெகிழ்வுகள்

ஆசையப்பாவே! அருஞ்சுடரே! தங்கள் பிரிவால் அழுகின்றேன் . மூத்த முகிழ் மொட்டு முத்தான எம் தனிச் சொத்து என்று நீங்களும் அம்மாவும் (அம்முக்குட்டி) எனை மோந்து, முகந்து அன்பு பாராட்டி வளர்த்தீர்கள். அன்புகாட்டி அறிவூட்டி ஆளாக்கி வைத்த என் அப்பா! யாம் இங்கே! நீர் எங்கே! ஐயகோ என்னால் பொறுக்க முடியவில்லையே!

தன் பிள்ளைகளின் வளர்ச்சிக்காய் ஆலாய்ப்பறந்து அளவிலாப் பொருளீட்டி உள்நாட்டிலும் வெளிநாடாகிய ஓமானிலும் சேவையாற்றினீர்களே! அம்மா மீதும் எங்கள் மீதும் எவ்வளவு இரக்கம் கருணை. அப்பா! என்னை நன்கு கற்க வைத்து நன்னிலைக்கு உயரவைத்து B.Com பட்டதாரியான சுபாசினியைக் கல்யாணம் செய்வித்து எம்மூலம் மூன்று பேரர்களை நீங்கள் காணவைத்து பிரான்சில் சிறப்போடு வாழவைத்தீர்களே. உங்களை அப்பா என்று அழைப்பதற்கு யான் என்ன தவம் செய்திருக்க வேண்டும்

அப்பா! என் மனைவி பிள்ளைகளோடு உவ்விடம் விரைவில் வந்து காண விரும்பினேன். என்விருப்புக்கு முன்னே நீங்கள் விண்ணுலகை அடைந்து விட்டீர்களே அப்பாவே! தங்களை யான் நினைக்க கண்களிலிருந்து கண்ணீர் ஆறாக ஓடுகின்றது. கவலை நெஞ்சை வாட்டுகின்றது. முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து பெற்றெடுத்த என் தாயையும் பிள்ளைகளாகிய எம்மூவரையும் பேரர்களையும் தவிக்க விட்டுச் சென்றீர்களே! அந்த நாள் ஞாபகம் என் நெஞ்சிலே வருகின்றது. அப்பா! என் அப்பா! எனக்கு சின்னஞ்சிறு வயதிலிருந்தே நற்பண்புகளை

எடுத்துரைத்து சிறியவர் முதல் பெரியவர் வரை எப்படிப் பழகவேண்டும் என்பதை உரைத்ததோடு எம்மைக்கஷ்டம் என்ற நிலைக்கு வைக்காமல் வளர்த்தெடுத்து உலகப்படங்கள் மூலம் நாடுகளைக் காட்டி உலக நற்புகழை எடுத்துரைத்து என்னை இந்தியாவிற்கு அனுப்பி எலக்ரோனிக், எலக்ரிக்கல், கம்பியூட்டர் படிப்பை தொடரவைத்து சிங்கப்பூரில் சிறப்பாகத் திருமணமும் எனக்குச் செய்து வைத்த என்தெய்வமே! இனி எப்போ தங்களைக் காண்பேன்! அந்த நாட்களைக் இன்றும் மனதுள் எண்ணி எண்ணி அழுகின்றேன் யான் அழுகின்ற கண்ணீரும் என் மனைவி குஞ்சுகள் பேரர்கள் அழுகின்ற கண்ணீரும் கவலைகளைப் போக்குமா! மறக்க வைக்குமா? இதையறியாது அழுகின்றேன் என் அழுகைக்கு நீங்களே ஆறுதல் தாருங்கள்.

அன்புள்ள மூத்த மகன்
சிவகுமார்



# இரண்டாவது மகன் ஸ்கந்தகுமாரின் கவலை வெளிப்பாடு

எங்கள் குலதீபமே! எங்களின் ஒளிவிளக்கே! எங்கள் அருட்சுடரே! தியாகச் சுடரே! என் அப்பாவே! தங்கள் ஒளி மங்கியதோ மறைந்ததோ அறியாதே திகைக்கின்றேன் எம்மைப் பாராட்டி புகழ்ந்துரைத்து வளர்த்தெடுத்த தெய்வமே! எம் அகவைக்கேற்ற அறிவுரைகளும் புத்திமதிகளும் புகன்ற அப்பாவே! (அப்புக்குட்டியே) தாங்கள் யாழ்ப்பாணக் கல்லூரியில் படிக்கும் காலத்தில் ஓடுதல் பாய்தல், ரெனிஸ், கரம் ஆகிய பல்வேறு விளையாட்டுத் துறைகளில் பங்குபற்றிப் பலசான்றுகளையும் விருதுகளையும் பெற்றதை இன்றும் ஊரார் வியந்து பேசுவார். பிள்ளைகளாகிய யாமும் கல்வியிலும் விளையாட்டுத்துறைகளிலும் ஈடுபட வைத்தீர்கள். இத்தகைய ஓர் தந்தைக்கு யாம் மூவரும் பிள்ளைகளாகப் பிறக்க கொடுத்து வைத்தவர்கள்.

என் அப்பா சென்ற இடமெல்லாம் பேரும் புகழும் பெற்று விளங்கியதோடு 45 வயது வரை இலங்கையில் சேவையாற்றிப் பின் 61 வயது வரை பதினாறு ஆண்டுகள் ஓமான் நாட்டில் வேலை செய்தார். ஏன்? எதற்காக? யாவும் எமக்காக. பிள்ளைகள் தம் சொந்தக் காலிலே நிற்க ஆளாக்கி வெளிநாடுகளில் யாவரும் சீரோடும் சிறப்போடும் வாழ வழிவகுத்த எம்அப்பாவை என்னென்று அழைப்பது. இவ்வுலகிலே ஓர் சிறந்த தந்தையென்றே அழைக்கலாம். " IS THE BEST DAD IN THE WHOLE WORLD" என் அதிசய அப்பா! (MY WONDERFUL FATHER) யான் C.I.M.A ACCOUNTANT கணக்காளராக வருவதற்கும் லண்டனில் கணக்காளராக (ACCOUNTANT) சேவையாற்றும் தங்கள் உறவினர் அருணாவைத் திருமணம் செய்வதற்கும் தங்கள் முயற்சியே என்பதில் யான் பெருமை பெற்றேன்.

அப்பா! எங்கள் அம்மாவையும் (அம்மாக்குட்டி) பிள்ளைகளாகிய எம்மூவரையும் தவிக்கவிட்டுச் சென்றதால் உள்ளம் உருகுகின்றோம் ! ஏங்கித் தவிக்கின்றோம்! சரி என்றோ நடப்பது நடந்து விட்டது விண்ணுலகில் இருந்து நீங்கள் எங்களை என்றும் ஆசீர்வாதம் செய்யுங்கள்.

அன்பு மகன்
ஸ்கந்தகுமார்

## மகள் ஞானசக்தியின் மனவேதனை

என் அருமை அப்பாவே! பெண்குழந்தை பொன்குழந்தை என்பீர்கள். ஆண்பிள்ளைகளோடு ஓர் பெண்பிள்ளை இல்லையென்று ஏங்கித் தவமிருந்து என்னைப் பெற்றதாகக் கூறுவீர்கள். இதனால் என்னை டோற்றி டோற்றி (**DOUGHTY**) என்று அழைப்பீர்கள். கிடைத்தற்கரிய மலரான குறிஞ்சிப் பூப்போல என்னைக் குறிஞ்சி மலரே! குறிஞ்சி மலரே! எனக் கூப்பிடுவீர்கள். என்னைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தெடுத்தீர்கள். யான் பரிஸ் மாநகரிலே சிறப்புடன் வாழ நல்லதோர் தொழில்நுட்பவியலாளரான கணவனை எனக்குத் தேர்ந்தெடுத்தீர்கள். அப்பா! என் அப்பாக்குட்டி! நீங்கள் உயிர்விடும்போது பக்கத்தே இருக்காத பாவியாகி விட்டேன். நீங்கள் ஆவி பிரியும் போது உங்கள் குறிஞ்சி மலரான என்னை அழைத்தீர்களா? ஐயோ! என் அப்பாவை இனி இவ்வுலகில் காண்பேனா? எங்கள் அம்மாவையும் எங்கள் யாவரையும் கண்ணீர்க் கடலிலே தோய வைத்துச் சென்றீரோ! எங்கள் அம்மாக் குட்டியோடு தங்களை இனி எப்போ காண்பேன். அப்பா! யான் தவிக்கின்றேன். ஏங்குகின்றேன். அப்பா! நீங்கள் மண்ணுலகைவிட்டுப் பிரிந்தாலும் என் கனவுலகிலாவது காட்சி தரமாட்டீர்களா?


அன்பு மகள்
ஞானசக்தி
(பிரான்ஸ்)

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத்தலைவனும் குலச்சுடரும் நன்னெறி புகட்டி நல்வழிகாட்டி நம்மை வளர்த்தெடுத்த எம் தந்தையின் மரணச்சடங்கில் பங்குபற்றி அனுதாபம் தெரிவித்தோருக்கும் அயலூர் வெளியூர்களில் இருந்து வந்து அனுதாபம் தெரிவித்தோர்க்கும் வெளிநாடு-களிலிருந்து தந்திகள், கடிதங்கள், தொலைபன்னி, தொலை நகல்வு மூலம் அனுதாபம் தெரிவித்தோர்க்கும் இன்றைய அந்தியேட்டிக் கிரியைகளைச் சிறப்புற ஆற்றிய குருமார்களுக்கும் இன்றைய அந்தியேட்டி வைபவத்தில் பங்குபற்றிய அன்பு நெஞ்சங்கட்கும் இம்மலர் சிறந்த முறையில் வெளியிட ஆலோசனை நல்கிய கலாபூஷணம், பிரசங்கபூஷணம், சிவகலாபூஷணம் சுழிபுரம் நடேசன் சிவசண்முகமூர்த்தி B.A. Dip In Eol (முன்னாள் ஆசிரிய ஆலோசகர்) அவர்கட்கும் அச்சிட்டுதவிய வழக்கம்பரை ஸ்ரீ விநாயகர் அச்சகத்தாருக்கும் எம் உளங்கனிந்த நன்றியை நவில்கின்றோம்.

நன்றி
வணக்கம்

"திலகவாசா"
ஞானசம்பந்தர் வீதி,
வட்டுக்கோட்டை.
13.01.2006



மனைவி, மக்கள்
மருமக்கள், பேரர்கள்